**சிறுவர்களை வேலைக்கமர்த்துவதிலிருந்து இலங்கை வெற்றிகரமாக வெளியேறுகிறது**

“இதோ, இதை முகர்ந்து பாருங்கள்! இது மல்லிகை எண்ணெய்”, என்று என்னிடம் ஒரு குப்பியை நீட்டினார் தெற்காசிய நகரமொன்றில் தோல் பதனிடும் தொழிற்சாலை ஒன்றின் சொந்தக்காரர். “இந்த எண்ணெயின் நறுமணம் உங்களுக்கு ஏற்படுகின்ற எந்தவொரு அசௌகரியமான உணர்வினையும் நீக்கக் கூடியது, இது பரிசீலனை செய்யப்பட்ட ஒரு நிவாரணி”.

அவர் அவ்வாறு கூறிய போது நான் மிகவும் அசௌகரியமக உணர்ந்தேன். உண்மையிலேயே சிகிச்சை தேவை அந்த நறுமணத்தின் மூலம் அல்ல, 13 வயது நரம்பிய சிறுவர்களை வேலைக்கமர்த்தும் அந்த தோல் பதனிடும் தொழிற்சாலைக்கே. ஆனாலும் அச்சிறுவர்கள் 10 வயது நிரம்பியவர்கள் போன்று தேன்றினர். அவர்களது வயதினை உறுதிப்படுத்த பிறப்புச்சான்றிதழோ எதுவுமே இல்லை. பெரும்பாலும் அவர்கள் ஆண் குழந்தைகள், ஏழ்மையில் வாடுபவர்கள், போஷாக்கற்றவர்கள், சமூகத்தின் அடிமட்ட அங்கத்தவர்களாக கருதப்படுபவர்கள், அவர்களது இளம் உடலும் உள்ளமும் நச்சுத்தன்மை வாய்ந்த இரசாயனப் பொருட்களோடு கலக்கின்றன, அவர்களது வெற்றுப் பிஞ்சுக்கரங்கள் இறந்த மிருகங்களின் சிதைவுகளை சுமக்கின்றன, 45 பாகை செல்சியஸ் வெப்பநிலையில் வெந்து நிற்கின்றார்கள்… அவர்களது குடும்பங்கள் எங்கே?, அவர்கள் ஏன் பாடசாலை செல்லவில்லை? அவர்கள் எங்கே வாழ்ந்தார்கள்? அவர்களது சிறுபராயம் எங்கே, அவர்களுக்குரிய கண்ணியம் எங்கே?

“பாதுகாப்பான, ஆரோக்கியமான ஒரு சந்ததி” என்ற தொனிப்பொருளில் இவ்வாண்டின் ‘சிறுவர்களை வேலைக்கமர்த்துவதற்கு எதிரான உலக தினம்’ ஜுன் 12ஆம் திகதி நினைவு கூறப்பட இருக்கும் நிலையில் இந்த அனுபவம் இனிமேலும் தொடர முடியாது.

சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் ஓர் அங்கமாக சுமார் 20 வருடங்கள் சிறுவர்களை வேலைக்கமர்த்துவதற்கு எதிரான பிரச்சாரத்தில் நான் என்னை ஈடுபடுத்தி வருகின்றேன். ஆசியா, ஆபிரிக்கா மற்றும் அதற்கு அப்பாலும் இதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் நூற்றுக்கணக்கான நிறுவனங்களுடன் கைகோர்த்துள்ளேன். இந்த 21ஆம் நூற்றாண்டில் சிறுவர்களை வேலைக்கமர்த்துவதற்கு எங்கும் எந்த உடன்பாடும் இல்லை. அதனை நியாயப்படுத்த பல்வேறு வாதங்கள் முன்வைக்கப்பட்டாலும் சிறுவர்களை வேலைக்கமர்த்துவதனூடாக எவ்வித சமூக, பொருளாளதார நன்மைகளும் ஏற்படப் போவதில்லை. நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தி இலக்குகளை அடைய முயற்சிக்கும் இந்த தசாப்தத்தில் இதற்கு எந்த இடமும் இல்லை. சிறுவர்களை வேலைக்கமர்த்துவது முற்றாக ஒழிக்கப்பட முடியும். அது எவ்வாறு என்று நாம் அறிவோம். சிறுவர்கள் தொழில்களில் ஈடுபடாமலே சமூக பொருளாதார நன்மைகள் அடையப்பட முடியும். உண்மையிலேயே சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுவது இந்த விழிப்புணர்வின் ஊடாக உலகளாவிய ரீதியில் கணிசமான அளவு வீழ்ச்சி கண்டு வருகின்றது.

2017ஆம் ஆண்டு நான் இலங்கைக்கு வந்த போது சிறுவர் தொழிலை ஒழிப்பதில் இந்த நாடு அடைந்து வரும் முன்னேற்றம் எனக்கு ஒரு புதிய உத்வேகத்தை ஏற்படுத்தியது. இருப்பினும் சிறுவர்கள் வேலைக்கமர்த்துவதை முற்றாக ஒழிக்கும் பணி இன்னும் நிறைவு பெறவில்லை. ஏனைய தெற்காசிய பிராந்திய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை தனியாக மிளிர்ந்தாலும் இந்த நாட்டில் சிறுவர் சனத்தொகையில் 1 வீதம் இன்னும் தொழிற்சந்தையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றனர். பெரும்பாலான சிறுவர்கள் பாடசாலை செல்லும் வழக்கம் உள்ளவர்களாக இருக்கின்றனர், அவர்கள் எந்தவொரு கடினமான தொழில்முயற்சிகளிலும் வேலையாட்களாக ஈடுபடுத்தப்படுவதில்லை. பாடசாலை செல்லும் வயது தற்போது 16 வரை என கட்டாயமாக்கப்பட்டுள்ளது, இவ்வயதெல்லை தொழில் ஒன்றில் ஒருவர் ஈடுபடுவதற்கான அடிப்படை வயதாகவும் விரைவில் பிரகடனப்படுத்தப்பட உள்ளது. அபாயகரமான தொழில்களில் சிறுவர்கள் ஈடுபடுவது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது, தேசிய கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளன, தலைநகரிலும், மாவட்டங்கள் தோறும் சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுத்துவதை கண்காணிப்பதற்கான, அதனை கட்டுப்படுத்துவதற்கான பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்கள் நாடெங்கிலும் உள்ளனர், சமூகங்கள் சிறுவர்களை வேலைக்கமர்த்துவதால் ஏற்படும் குறுகிய கால நலன்களை புறக்கணிப்பதோடு அதனால் ஏற்படவுள்ள நீண்டகால எதிர்வினைகளை உணர்ந்து வருகின்றது.

இந்த முன்னேற்றகரமான நிலை இலகுவாக சிதைக்கப்படவும் வாய்ப்புக்கள் உள்ளன. சிறுவர்கள் குறிப்பாக ஆண்கள், 15-18 வயதுடைய சவால்களை ஏற்க முற்படும் இளைஞர்கள் தம்மை கடினமான மற்றும் அபாயகரமான தொழில்களில் ஈடுபடுத்திக் கொள்கின்றனர், தொழில் ரீதியான காயங்களுக்குட்படுகின்றனர், மற்றவர்களால் பயன்படுத்தப்படுகின்றனர். சிறந்த தொழில்களுக்காக தம்மை தயார்படுத்திக் கொள்ளாமை, தொழில் வழங்குனர்களுடன் பேரம் பேசக்கூடிய ஆற்றலின்மை, பால்ரீதியான சமத்துவமின்மை, சமூக பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் போன்ற

காரணிகள் இந்த இளம் சந்ததியினரை பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாகவும் செழிப்பாகவும் வைத்திருப்பதற்கு அச்சுறுத்தலாக அமையக் கூடியன.

இலங்கை முழுமையாக திருப்தியடைய முடியாது. இந்நாட்டிலிருந்து சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படும் நிலையை 2025ஆம் ஆண்டில் முழுமையாக ஒழிக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை. இருப்பினும் இந்த இலக்கை அடைவதற்கு இலங்கை சகல ஆற்றல்களையும் கொண்டுள்ளது. சர்வதேச ரீதியில் சகல உடன்படிக்களிலும் கைச்சாதிட்டுள்ளது.

இந்த இலக்கை அடையும் தருணம் இது தான். இலங்கை தான் மட்டும் இவ்விலக்கை அடைவதல்ல, ஏனைய நாடுகளுக்கும் ஒரு முன்னுதாரணமாக இருக்க வேண்டும். சிறுவர்களை வேலைக்கமர்த்துவதற்கு எதிரான இந்த சர்வதேச தினத்தில் சிறுவர் தொழிலை முற்றாக ஒழிப்பதானது இலங்கையின் வெற்றியின் நறுமணத்தை உலகம் நுகரச் செய்யும்.